# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 124 | சனிக்கிழமை Saturday | 01.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## காவல்துறையில் சிறப்பாக பணியாற்றும்

# போலீஸ் அதிகாரிகளுக்கு பதக்கங்களை முதலமைச்சர் விஜய் வழங்கினார்







தமிழக காவல்துறையில் சிறப்பாக பணியாற்றும் போலீஸ் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு ஆண்டுதோறும் முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான முதலமைச்சர் பதக்கம் பெறுபவர்களின் பட்டியல் அறிவிக்கப்பட்டிருந்தது. இவற்றுடன் ஜனாதிபதி பதக்கம் பெறுபவர்கள் மத்திய உள்துறை அமைச்சர் பதக்கம் பெறுபவர்களின் பட்டியலும் வெளியிடப்பட்டிருந்தது.

இதில் ஐ.பி.எஸ். அதிகாரிகள் உள்பட காவல்துறையில் மெச்சத்தகுந்த வகையில் பணியாற்றிய காவலர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, ஊர்க்காவல் மற்றும் குடிமை பாதுகாப்பு படை மற்றும் தடய அறிவியல் துறையினருக்கு முதலமைச்சர் விஜய் பதக்கங்களை வழங்கி வருகிறார்.

2023, 2024, 2025 ஆண்டுககான 665 காவல்துறை அதிகாரிகள், காவலர்களுக்கு முதலமைச்சர் விஜய் விருது வழங்கி கவுரவித்து வருகிறார்.

இதில், ஏடிஜிபி மகேஷ்வர்தயார்,விழுப்புரம் சரக டிஐஜி அருளரசு, காஞ்சிபுரம் எஸ்பி அரவிந்த் ஆகியோருக்கு முதலமைச்சர் விருது வழங்கினார்.

ஐஜிக்கள் லோகநாதன், நரேந்திரன், பாபு, ரூபேஷ் குமார் மீனா, பிரவீன் குமார் உள்ளிட்டோருக்கு முதலமைச்சர் விஜய் விருது வழங்கினார்.

ரெயில்வே டிஜிபி வன்னிய பெருமாள், சிபிசிஐடி ஏடிஜிபி அபின் தினேஷ் மோடக் உள்ளிட்டோருக்கும் முதலமைச்சர் விஜய் விருது வழங்கினார்.

சென்னை ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெறும் காவல்துறையினருக்கு பதக்கங்கள் வழங்கும் விழாவில் முதல மைச்சர் விஜய் பங்கேற்றார். அதன்படி, சென்னை எழும்பூர் ராஜரத்திம் மைதானத்தில் 600க்கும் மேற்பட்ட காவல்துறையினருகுகு முதலமைச்சர் விஜய் பதக்கங்களை வழங்கினார்.

காவல்துறையினருக்கு ஜனாதிபதி பதக்கங்கள், மத்திய உள்துறை அமைச்சர் பதக்கங்கள், முதலமைச்சர் பதக்கங்களை வழங்கினார்.

முன்னதாக, பதக்கம் வழங்கும் விழாவில் பங்கேற்க வந்த முதலமைச்சர் விஜய்க்கு காவல்துறை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அப்போது பல்வேறு படைப்பிரிவுகளின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் விஜய் ஏற்றார்.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் விஜய் ஏற்றார்.

# மின்சாரப் பயன்பாட்டைக் கணக்கெடுக்கும் பணி சரியான முறையில் மேற்கொள்ளப்படுவதை அரசு உறுதி செய்திட வேண்டும்; தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை:

"மின்சாரப் பயன்பாட்டைக் கணக்கெடுக்கும் பணி (Reading) சரியான முறையில் மேற்கொள்ளப்படுவதை அரசு உறுதிசெய்திடவேண்டும்," என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

"3.70 லட்சம் குடும்பங்களுக்குக் கூடுதல் மின்கட்டணம் வசூலிக்கப்பட்டதை ஒப்புக்கொண்டு, தன் நிர்வாகத் திறமையின்மையை வெட்டவெளிச்சமாக்கியுள்ளது தவெகஅரசு. ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே மக்கள் தலையில் அநியாயப்பொருளாதாரச் சுமையைச் சுமத்தியுள்ள இந்த மக்கள் விரோத அரசு இனியாவது திருந்தட்டும்" என்று திமுக ஐடி விங் சார்பில் கருத்து தெரிவித்துள்ளது.

இதனை மேற்கோள் காட்டி திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்: "3.70 லட்சம் குடும்பங்கள் கூடுதல் மின்கட்டணம் தொடர்பாகப் புகாரளித்திருப்பதை அரசே வேறு வழியின்றி ஒப்புக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. சமூக ஊடகங்களில் பொதுமக்களின் குமுறலைப் பார்க்கும்போது, மொத்தம் பாதிப்படைந்தவர்கள் எண்ணிக்கை இன்னும் பலமடங்கு இருக்கக் கூடும் என்பது உறுதியாகிறது.

இந்தக்குளறுபடிகள் ஆய்வு செய்யப்பட்டுத் தீர்வு காணப்படும் வரை, மின்கட்டணம் செலுத்துவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட வேண்டும்.

இனி வரும் காலங்களில், மின்சாரப் பயன்பாட்டைக் கணக்கெடுக்கும் பணி (Reading) சரியான முறையில் மேற்கொள்ளப்படுவதை அரசு உறுதி செய்திட வேண்டும்." என்று மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

# "தமிழக முதல்வர் விஜய் இப்போதைக்கு கர்நாடகாவுக்கு வர வேண்டாம்" டிகே.சிவகுமார் வேண்டுகோள்



சென்னை: "தற்போதைய சூழலில் தமிழக முதல்வர் விஜய் கர்நாடகா வரவேண்டாம் . பதற்றமான சூழல் நிலவும் நிலையில், தமிழக முதல்வர் கர்நாடகாவுக்கு வந்தால் சரியாக இருக்காது. தமிழக முதல்வர் கர்நாடகா வரும்போது இங்கே போராட்டங்கள் நடந்தால் நன்றாக இருக்காது" என கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களை சந்தித்த கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார், "பல்வேறு விவகாரங்கள் குறித்து எங்களை நேரில் சந்தித்து விவாதிக்க விரும்புவதாக தமிழக முதல்வரின் அலுவலகத்திலிருந்து எங்கள் தலைமைச் செயலாளருக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். வரும் ஆகஸ்ட் 3-ம் தேதி இருவரும் சந்திக்கலாம் எனத் திட்டமிட்டோம்.

இருப்பினும், காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழுவின் உத்தரவுகளுக்குப் பிறகு, தற்போதைய சூழல் அதற்கு உகந்ததாக இல்லை என்று நான் கருதுகிறேன்.

இரு மாநிலங்களுக்கும் இடையே மிகவும் சுமுகமான சூழல் நிலவ வேண்டியது அவசியம் என்பதால், இந்தச் சந்திப்பை சிறிது காலம் ஒத்திவைக்குமாறு அவரிடம் கேட்டுக்கொள்கிறேன். இரு மாநிலங்களும் இதனால் பயனடைய வேண்டும் என்பதே என் விருப்பம். நமக்குள் எந்த விதமான கசப்புணர்வும் ஏற்பட நான் விரும்பவில்லை; ஏனெனில், தண்ணீர் தொடர்பான விவகாரத்தில் இருமாநிலங்களும் பயனடையும் வகையிலேயே தீர்வு அமைய வேண்டும்.

இவை அனைத்தும் மழை பொழிவதைப் பொறுத்தே அமைகிறது. உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே தெளிவான வழிகாட்டுதலையும், தீர்ப்பையும் வழங்கியுள்ளது. மேகேதாட்டு அணைத் திட்டத்தைப் பொறுத்தவரை, அது எங்களை விடத் தமிழகத்திற்கே அதிகப் பலனளிக்கக்கூடியது. மின் உற்பத்தியைத் தவிர மற்ற அனைத்து வகையிலும் அது தமிழகத்திற்கு அதிக நன்மையை அளிப்பதாகவே உள்ளது. முன்னரே எடுக்கப்பட்ட முடிவின்படி, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைச் செயல்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எந்தவொரு உத்தரவையும் மீற நாங்கள் விரும்பவில்லை. அதேவேளையில், எங்கள் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இது குறித்த தகவல்களைத் தெரிவிப்பது எனது கடமையாகும்.

முன்னரே எடுக்கப்பட்ட முடிவின்படி, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைச் செயல்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எந்தவொரு உத்தரவையும் மீற நாங்கள் விரும்பவில்லை. அதேவேளையில், எங்கள் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இது குறித்த தகவல்களைத் தெரிவிப்பது எனது கடமையாகும்.

அவர்கள் எங்களுக்கு முழு ஒத்துழைப்பையும் உதவியையும் அளித்து வருகின்றனர்.

அரசியல் நோக்கங்கள் மற்றும் கருத்துகளில் எங்களுக்குள் வேறுபாடுகள் இருக்கலாம்; ஆனால், மாநிலத்தின் நலன் கருதி அவர்கள் எங்களுக்கு உதவுகிறார்கள். நாங்கள் அவர்களை நம்பிக்கைக்குரியவர்களாகக் கருதிச் செயல்படுவோம். நாளை மறுநாள் அவர்களைச் சந்திக்கவுள்ளோம்.

இதற்கிடையில் இரு மாநிலங்களின் நலன் கருதி அமைதியான மற்றும் சுமுகமான சூழலில் சந்திப்பை மேற்கொள்ளும் வகையில், தமிழக முதல்வரிடம் இந்தச் சந்திப்பைச் சிறிது காலம் ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# பெண்ணாடத்தில் அரிமா சங்கம் சார்பில் மாணவர்களுக்கான இலவச பல் பரிசோதனை முகாம்

கடலூர் மாவட்டம் பெண்ணாடத்தில், மாணவர்களுக்கான இலவச பல் பரிசோதனை முகாம் பெண்ணாடம் லயன்ஸ் சங்கத் தலைவர் ஆர். பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. முகாமில் சாசனத்தலைவர் அரிமா எம். ஞானப்பிரகாசம், மாவட்ட அவை பொருளாளர் அரிமா டி.வி. கே.வி.சக்திவேல், அரிமா ஹரி, முன்னாள் வட்டாரத் தலைவர் அரிமா ஆனந்தன், அரிமா மாரிமுத்து, அரிமா செல்வராஜ், அரிமா பாஸ்கரன், சங்கப் பொருளாளர் அரிமா கணேஷ் மற்றும் சங்கச் செயலாளர் பி. வேல்முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். பெண்ணாடம் ஜே.பி. மருத்துவமனையின் மருத்துவர் டாக்டர் ஜே. ஜெயபிரகாஷ் மாணவர்களுக்கு பல் பரிசோதனை மேற்கொண்டு தேவையான மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்று முகாமை வெற்றிகரமாக நடத்த ஒத்துழைத்த அனைவருக்கும் பெண்ணாடம் லயன்ஸ் சங்கம் சார்பில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.



# கீழ வீராணம் ஊராட்சியில் உலக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்கான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ வீராணம் ஊராட்சியில், உலக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியை முன்னிட்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அ. வீரபாண்டியன் தலைமை தாங்கினார்.

வீரகேரளம்புதூர் வட்டாட்சியர் ஆனந்த் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு உலக மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த துண்டுப் பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஒன்றிய பணி மேற்பார்வையாளர் ஞானபிரகாசி, ஊராட்சி செயலர் பாண்டியராஜ், வீ.கே.புதூர் உதவி காவல் ஆய்வாளர் சேகனா, சுகாதார ஆய்வாளர் ஷியாம் டேனியல், குறுவட்ட வருவாய் ஆய்வாளர் முத்துகுமார், கிராம நிர்வாக அலுவலர் சுதர்சன பாண்டியன், கிராம உதவியாளர் முருகராஜ், ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் சாகுல் ஹமீது, புஷ்பா, அனிபா, அங்கன்வாடி பணியாளர்கள் பூங்கோதை, மல்லிகா, தாஜ் நிசா, ஆனந்தி, நீர்பானக் குழுத் தலைவர் முத்து பாண்டியன், நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# ஆடி மாதம் அம்மன் கோயில்களுக்கு இலவச அரிசி, கேழ்வரகு வழங்கக்கோரி வாலாஜாவில் இந்து மக்கள் கட்சி மனு





ஆடி மாதத்தை முன்னிட்டு அம்மன் திருக்கோவில்களுக்கு கூழ் வார்ப்பதற்காகப் பச்சரிசி மற்றும் கேழ்வரகு ஆகிய தானியங்களை இலவசமாக வழங்க வலியுறுத்தி, இந்து மக்கள் கட்சி சார்பில் வாலாஜா வட்டாட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

இந்து மக்கள் கட்சியின் வேலூர் கோட்டத் தலைவர் எஸ்.கே. மோகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவட்டச் செயலாளர் பார்த்திபன், ஒன்றியப் பொதுச் செயலாளர் குமார், வாலாஜா கிழக்கு ஒன்றியத் தலைவர் அன்பழகன், வாலாஜா ஒன்றியச் செயலாளர் மணிவண்ணன், வாலாஜா மேற்கு ஒன்றியத் தலைவர் பிரபாகரன், வாலாஜா கிளைப் பொறுப்பாளர் சீனிவாசன் மற்றும் மகளிர்அணித்தலைவி பரமேஸ்வரி ரமேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து துணை வட்டாட்சியர் முத்துக்குமாரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. மனுவைப் பெற்றுக்கொண்ட துணை வட்டாட்சியர், தானியங்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து இதே கோரிக்கையை முன்வைத்து அஞ்சல் அலுவலகத்தின் மூலமாக முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பப்பட்டது



# வேப்பூர் சாய் அப்போலோ கல்வி நிறுவனத்திற்கு அங்கீகார ஆணை

கடலூர் மாவட்டம் வேப்பூரில் செயல்பட்டு வரும் சாய் அப்போலோ கல்வி நிறுவனத்தில் மருத்துவத் துணைப்பட்டயப் படிப்புகளை வழக்கமான முறையில் நடத்துவதற்கான அங்கீகார ஆணை வழங்கப்பட்டது.

இதற்காக மேற்கொள்ளப்பட்ட தர ஆய்வுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, பல்கலைக்கழக மானியக் குழுவின் அனுமதியின் அடிப்படையில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சந்திரசேகரன், பதிவாளர் டாக்டர் அண்ணாதுரை, இயக்குநர் டாக்டர் செல்வம் ஆகியோர் இணைந்து,

அங்கீகார ஆணையை கல்வி நிறுவனத்தின் நிறுவனர் டாக்டர் ஏ.ஆர். தங்கதுரையிடம் வழங்கினர்.

இந்த அங்கீகாரத்தின் மூலம், மருத்துவத் துணைப் பட்டயப் படிப்புகளை விதிமுறைகளுக்கு உட்பட்டு வழக்கமான முறையில் நடத்த கல்வி நிறுவனத்திற்கு அதிகாரப்பூர்வ அனுமதி கிடைத்துள்ளது.

### சிவகிரி வட்ட சட்டப்பணி குழு சார்பில்

# பத்மஸ்ரீ டாக்டர் சிவந்தி ஆதித்தனார் சிறப்புப் பள்ளியில் சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி



சிவகிரி வட்ட சட்டப் பணி குழு சார்பில், பத்மஸ்ரீ டாக்டர் சிவந்தி ஆதித்தனார் சிறப்புப் பள்ளியில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் திரு. செந்தில்குமார் மற்றும் திரு. செந்தில் திருமலைகுமார் ஆகியோர் கலந்து கொண்டு, சட்டம் குறித்த அடிப்படை விழிப்புணர்வு, பொதுமக்களின் உரிமைகள், குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சட்ட உதவிகள் குறித்து விளக்கி உரையாற்றினர்.

நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் கு. தவமணி அவர்கள் வழக்கறிஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

மேலும், தலைமையாசிரியர் த.சங்கரசுப்பிரமணியன், சிறப்பாசிரியர்கள் திருமதி ஆ.சாந்தி, திருமதி சு. ஹெலன் இவாற்சிலின், தசைப் பயிற்சியாளர் திருமதி சா. புனிதா, உதவியாசிரியர்கள் திருமதி நக. பூமாரி, திருமதி ஆ. சுடலி, பராமரிப்பாளர் ச. கவிதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பயனுள்ளதாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

### தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவன தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் விடுத்துள்ள அறிக்கை

தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனதலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் விடுத்துள்ள அறிக்கையில் குற்றாலத்தில் காந்திக்கும் காமராஜருக்கும் ஒரே இடத்தில் முழு திருவுருவச்சிலை சாரல் விழா நிறைவு நாளில் தமிழகஅரசு அறிவிக்க வேண்டும் 1917 ஆம்




ஆண்டுக்கு முன் குற்றாலத்தில் ஆங்கிலேயர்கள் மட்டும்தான் குளிக்க முடியும் அருள்மிகு குற்றால நாதர் திருக்கோவில் அபிஷேகத்திற்கு மட்டும் அருவியல் இருந்து தண்ணீர் எடுக்க ஆங்கிலேயர்கள் அனுமதித்தார்கள் அனைத்து மக்களும் குளிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்று 1917 ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் வழக்குதொடுக்கப்பட்டது இந்தவழக்கைவிசாரித்த நீதிமன்றம் குற்றால நாதர் கோவில் அபிஷேகத்திற்கும் உயர்ந்த ஜாதினர்களுக்கும் குளிப்பதற்கு அனுமதி கொடுத்தது 24-01-1934 ஆம் ஆண்டு திருநெல்வேலி கூத்தப்பிள்ளை நயினார் வீட்டில் சமபந்தி விருந்தில் கலந்து கொள்ள வந்த மகாத்மா காந்தி இதனை கேள்விப்பட்டு குற்றாலம் வருவதாக அறிவித்தார்கள்

குற்றாலம் வந்த மகாத்மா காந்திக்கு பழைய குற்றாலத்திற்கும் குற்றாலத்திற்கும் பிரிகின்ற இடத்தில் பொதுமக்கள் வரவேற்பு கொடுத்தார்கள் அனைத்து சமுதாய மக்களோடு மகாத்மா காந்தி குற்றாலத்திற்கு குளிக்க முற்பட்டபோது ஆங்கிலேயர்கள் காந்தியையும் அவரோடுவந்தவர்களையும் தடுத்து உள்ளே நுழைந்தால் துப்பாக்கிச் சூடு நடத்துவோம் என்று எச்சரித்து திருப்பி அனுப்பினார்கள் பொதுமக்களின் நலனுக்காக காந்தியடிகள் திரும்பி சென்றார் அதன் பிறகு 1938 ஆம் ஆண்டு சென்னை மாகாண முதல்வராக ராஜாஜி இருந்த போது அனைத்து சமுதாய மக்களும் குளிப்பதற்கு அனுமதிக்க பட்டது இதேபோல் பெருந்தலைவர் காமராஜருக்கும் இதே இடத்தில் தான் பொதுமக்கள் முதன்முதலாக வரவேற்பு கொடுத்தார்கள் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது நில்வளம் தமிழ்நாட்டுக்கும் மலை வளம் மலையாளத்துக்கும் வேண்டுமென்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது முடிவில் சுமார் 55 ஏக்கருக்கு மேல் உள்ள இடத்தில் திருவிதாங்கூர் மன்னர்கள் தங்குவதற்கு சமஸ்தானத்தின் சார்பில் பங்களா கட்டி இருந்த இடம் மட்டும் மலையாள அரசுக்கு கொடுக்கப்பட்டது இந்த இடம் தற்போது கேரள அரசு தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளது

மிகப்பெரிய அளவில் பேச்சுவார்த்தை நடத்தி குற்றாலம் பகுதி தமிழ்நாட்டுடையது இதனை தர முடியாது என்று குற்றாலத்தை தமிழ்நாட்டுக்கு தக்க வைத்தவர் பெருந்தலைவர் காமராஜர் பொதுமக்களின் மகிழ்ச்சிக்காக பழைய குற்றாலம் அருவியை செயற்கையாக உருவாக்கியவர் காமராஜர் குற்றால வரலாற்றை வரும் தலைமுறைகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக 12-08-1985 ஆம் ஆண்டு குற்றாலத்திற்கு வருகை தந்த குமரி ஆனந்தன் அவர்கள் காந்திக்கும் காமராஜருக்கும் வரவேற்பு கொடுத்த இடத்தில் ஒரு நினைவு கல் தூண் நட்டினார்கள் அந்த நினைவு கல்வெட்டு இன்றளவும் மண்ணுக்குள் புதைந்திருக்கிறது

அதனால்தமிழகஅரசு 04-08-2026 அன்று சாரல் விழா நிறைவு நாளில் மகாத்மா காந்திக்கும் பெருந்தலைவர் காமராஜருக்கும் ஒரே இடத்தில் முழுதிருஉருவச்சிலைவைப்பதற்குஅரசுஅறிவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் கேட்டு கொள்கிறோம் என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

# கோவையில் கட்டிடங்களுக்கு உதவும் ரெனாஃபிளக்ஸ் பிராண்ட் ஃபைபர் சிமெண்ட் போர்டுகளை அறிமுகப்படுத்தியது ரெனாகான் நிறுவனம்!




பசுமையான, வேகமான மற்றும் பாதுகாப்பான கட்டிடங்களைக் கட்ட, உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வகை, போர்டுகள், இந்தியாவிலேயே முதன்முறையாக லேமினார் ஃப்ளோ டெக்னாலஜி ஐப்பயன்படுத்தி, பல நிலையான கட்டுமானத் தீர்வுககளை அறிமுகப்படுத்தியுள்ளது. ஈரோட்டைச் சேர்ந்த ரெனாடஸ் குழுமம், தனது ரெனாடஸ் பிராடக்ட் பிரைவேட் லிமிடேட் நிறுவனத்தின் மூலம் ரெனாஃபிளக்ஸ் பிராண்ட் ஃபைபர் சிமெண்ட் போர்டுகளை அறிமுகப்படுத்தியது. பசுமையான, வேகமான மற்றும் பாதுகாப்பான கட்டிடங்களைக் கட்ட இந்த போர்டுகள் உதவும். 350 கோடி முதலீட்டில், ரெனாகான், ஆந்திரப் பிரதேசத்தின் நாயுடுப்பேட்டையில் ஏ.ஏ.சி பிளாக்ஸ் ரேபிட் வால் பேனல்ஸ் மற்றும் ஃபைபர் சிமெண்ட் போர்டு ஆகியவற்றின் உற்பத்திக்காக உலகத் தரத்திலான ஒருங்கிணைந்த தொழிற்சாலையை நிறுவியுள்ளது. வெறும் 12 மாதங்களில் கட்டமைக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை, உலகளவில் அளவுகோலாகக் கருதப்படும் லேமினார் ஃப்ளோடெக்னாலஜி யை இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தி, நவீன கட்டுமானத்தின் அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய துல்லிய- பொறியியல் வடிவமைப்பைக் கொண்ட நிலையான கட்டுமானப் பொருட்களை வழங்குகிறது.

இது குறித்து ரெனாடஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் செல்வசுந்தரம் கூறியதாவது. "கோவையில் ரெனாஃபிளக்ஸ் பிராண்ட் அறிமுகமாவது, முழுமையான கட்டுமானத் தீர்வுகள் வழங்குநராக மாறும் ரெனாகானின் பயணத்தில் ஒருமைல்கல் ஆகும். தென்னிந்தியாவின் மிக வேகமாக வளர்ந்து வரும் தொழில் துறை மற்றும் ரியல் எஸ்டேட் மையங்களில் ஒன்றாகிய கோவை, நவீன மற்றும் நிலையான கட்டுமான முறைகளை விரைவாக ஏற்றுக்கொண்டு வருகிறது. எங்களின் முதன்மை குடியிருப்புத் திட்டமான 'வரம்' மூலம் ஏற்கனவே கோயம்புத்தூரில் வலுவான இருப்பை உருவாக்கியுள்ளதாக தெரிவித்தார்.

## திருப்போரூர் அருகே தண்டலம் ஊராட்சியில்
# 20 ஆண்டுகளுக்குப் பிறகு தூர்வாரும் ஸ்ரீ துலுக்காத்தம்மன் கோவில் குளம்

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த தண்டலம் ஊராட்சி 7வது வார்டு அருள்மிகு ஸ்ரீ துலுக்கானத்தம்மன்



கோவில் குளம் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் உள்ளது,

இதனை ஊர் பொதுமக்கள் ஊராட்சி மன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டு தூர் வாரும்படி கேட்டுக் கொண்டனர்,

அதனைஏற்று ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன், அவர்களின் முயற்சியில் தூர் வாருவதற்கான பூமி பூஜை போட்டு துவக்கி வைத்தனர்,

உடன் துணைத் தலைவர், ஊராட்சி செயலர், வார்டு உறுப்பினர்கள், மற்றும் ஊர் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்,

# பணி ஓய்வில் செல்ல இருக்கும் போலீசாருக்கு நினைவு பரிசு வழங்கிய எஸ்பி ஸ்டாலின்



காவல்துறையில் பணிபுரிந்து, இந்த மாத இறுதியில் ஓய்வில் செல்லவிருக்கும் 4 சிறப்பு உதவி ஆய்வாளர்கள், 1 அமைச்சுப் பணியாளர் மற்றும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுடன்மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் கலந்துரையாடினார். அதன்படி பணியில் சிறப்பாக செயல்பட்டு தங்களது பணியை நிறைவு செய்யும் அனைவரையும் பாராட்டி சான்றிதழ் மற்றும் வாழ்த்துமடல்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வழங்கி கௌரவித்தார்கள்.

# நெல்லை களக்காட்டில் அம்பேத்கர் வெண்கல சிலை அமைக்க அனுமதி மறுப்பு
## அனைத்து அரசியல் கட்சியினர் ஆர்ப்பாட்டம்




நெல்லை மாவட்டம் களக்காட்டில் சட்ட மாமேதை புரட்சியாளர் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் வெண்கல சிலை அமைக்க அனுமதி மறுத்த தைக் கண்டித்து அனைத்து அரசியல் கட்சியினர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் சட்ட மாமேதை அம்பேத்கர் வெண்கல சிலை களக்காடு -சேரன்மகாதேவி மெயின் ரோட்டில் கடந்த 8.6.1991அன்று அம்பேத்கர் கற்சிலை நிறுவப்பட்டது தொடர்ந்து அங்கு அம்பேத்கருக்கு வெண்கல சிலை முடிவு செய்யப்பட்டு கடந்த 25.7.26 ந்தேதி திருப்பு விழா நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது இதற்கு இடையே அந்த இடம் நீர் நிலை புறம்போக்கு என்று கூறி மாவட்ட நிர்வாகம் அனுமதி மறுத்ததாக கூறப்படுகிறது எனவே அம்பேத்கர் வெண்கல சிலை அமைக்க அனுமதிக்க வலியுறுத்தியும் மாவட்ட நிர்வாகத்தை கண்டித்தும் களக்காட்டில் தாழ்த்தப்பட்டோர் சீர்திருத்த சங்கத்தினர் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது தாழ்த்தப்பட்டோர் சீர்திருத்த சங்க தலைவர் சுகுமார் தலைமை தாங்கினார்.

இதில் வடக்கு ஒன்றிய தி.மு.க செயலாளர் செல்வகருணாநிதி. முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் தமிழ்செல்வன்.அ.தி.மு.க நகரசெயலாளர்ராஜேந்திரன்.விடுதலை சிறுத்தைகள் கட்சி தென் மண்டல செயலாளர் சுந்தர். மாவட்டச் செயலாளர் ஈழவளவன். நகராட்சி காங்கிரஸ் கவுன்சிலர் சிம்சோன்துரை. புரட்சி பாரதம் கட்சி மாவட்டச் செயலாளர் நெல்சன். மாவட்ட விவசாய தொழிலாளர்சங்கசெயலாளர் பாலன்.எஸ். டி.பி.ஐ.கட்சி மாவட்ட பொதுச்செயலாளர் மீராஷா. தமிழ் புலிகள் கட்சி தமிழரசன்.தமிழ்மாறன்.ம.ம.க மாவட்டத் தலைவர் சித்திக். தமிழர் உரிமை மீட்பு கழகம் லெனின்கென்னடி உள்பட பல்வேறு கட்சியினர் அமைப்பினர் திரளாக கலந்து கொண்டனர்.

# மன்னார் வளைகுடா கடற்பகுதியில் கடல் சீற்றம்: பாம்பன் குருசடை தீவு படகு சவாரி நிறுத்தம்



ராமநாதபுரம் மாவட்டம்,மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை கடற்பகுதியிலும் சூறை காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோமீட்டர் வேகத்திலும், அதிகப்பட்சமாக 65 கி.மீ வேகம் வரையிலும் வீசக்கூடும் என்றும்,கடல் அலை 3.0 மீட்டர் வரையிலும் எழக் கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம், தங்களது மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அனைத்தையும் பாதுகாப்பாக வைத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். , ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரம், பாம்பன் மண்டபம், உள்ளிட்ட மீன்பிடி துறைமுக ங்களிலிருந்து கடலுக்குச் செல்ல அனுமதி டோக்கனும் கடந்த மூன்று நாட்காள நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கடல் சிற்றத்தினால் வனத்துறையினரால் நடத்தப்படும் பாம்பன்-குருசடை இடையே படகு சவாரியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் படகு சவாரி செல்ல முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். வானிலை இயல்பு நிலைக்கு திரும்பியதும் படகு சவாரி மீண்டும் தொடங்கும் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணா மருந்தியல் கல்லூரியின் 33வது பட்டமளிப்பு விழா




கோவை ஆவாரம்பாளையம்பகுதியில்உள்ள, ஸ்ரீராமகிருஷ்ணா மருந்தியல் கல்லூரியின்,முப்பத்தி மூன்றாவது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி கோவை ஆவாரம்பாளையம்பகுதியில்உள்ள, எஸ்.என்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகம், எஸ்.என்.ஆர். கல்லூரி, ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர், முனைவர் ஸ்ரீராம் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்திய மருந்தியல் ஆணையத்தின் செயலாளர் மற்றும் அறிவியல் இயக்குநரான முனைவர் கலைச்செல்வன், எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாகஅறங்காவலர் டாக்டர் சுந்தர்ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டு பட்டங்களை வழங்கினர். முன்னதாக ஸ்ரீராமகிருஷ்ணா மருந்தியல் கல்லூரியின் துறைத் தலைவர்கள், தங்கள் சம்பிரதாய ஆடைகளை அணிந்து, நிறுவனத்தின் பாரம்பரியம் மற்றும் சிறப்பின் அடையாளமாக விளங்கினர். முதல்வர், முனைவர் ஸ்ரீராம், ஸ்ரீராம கிருஷ்ணா மருந்தியல் கல்லூரி, வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், பட்டம் பெறும் மாணவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தார். அவர்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியை அங்கீகரித்தார்.

விழாவில், எஸ்.என். ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர், டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன், கூறியதாவது..

மருந்துகளை பாதுகாப்பாகக் கையாளவும், மருத்துவமனைகளில் தர மேலாண்மை அமைப்பு அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தைஅடிக்கோடிட்டுக் காட்டினார். இவ்விழாவில், 375 பட்டதாரிகள் தங்கள் பட்டங்களைப் பெற்றனர். மேலும், கல்லூரியின் தங்கப் பதக்கத்தை வென்ற மாணவ மாணவியர்களான ஸ்ரீனிவாஷினி, கோபி, நேத்ரா, தாக்ஷயினி, காயத்ரி செண்பகம், ஹரிவர்மா நந்தினி, மற்றும் சுபாஷினி ஆகியோரின் கல்விச் சிறப்பும், முன்னாள் மாணவர் சங்கத்தால் வழங்கப்பட்டது. சிறந்த மாணவருக்கான விருதை யஷ்வர்தினி, ஜெர்ஷா, ஹரீஷ் கரோலின் ரீகா, யுவராஜ், நவீன் குமார், சங்கவி ரமனசரண் ஆகியோரின் சாதனைகளும் அங்கீகரிக்கப்படும் வகையில் கௌரவிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்த க்கது.

# சிறப்பு தகுதித் தேர்வில் பணிமூப்பு மற்றும் கற்பித்தல் செய்முறைக்கு மதிப்பெண் வழங்கி, அனைத்து ஆசிரியர்களையும் தேர்ச்சி பெற வைக்க வேண்டும்



சென்ற ஆண்டு உச்ச நீதிமன்றம், பணியில் இருக்கும் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் கட்டாயம் ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) எழுதித் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதாவது, ஓய்வு பெற ஐந்து ஆண்டுகளுக்குள் உள்ள ஆசிரியர்களுக்குத் தேர்வில் இருந்து விலக்களித்துள்ளது. அதேநேரம், ஓய்வு பெற ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உள்ளவர்கள் பணியில் தொடர வேண்டுமானால், மூன்று ஆண்டுகளுக்குள் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்; அப்படித் தேர்ச்சி பெற்றால் மட்டுமே பணியைத் தொடர முடியும் என்று தீர்ப்பு வழங்கி ஆசிரியர்களை அதிர்ச்சி அடையச் செய்தது.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்புஉள்ளிட்டஅனைத்து ஆசிரியர் சங்கங்களையும் அழைத்து அரசிடம் கருத்து கேட்கப்பட்டது. அதிலே ஒட்டுமொத்த ஆசிரியர் சங்கங்களும் 2011ஆம் ஆண்டிற்கு முன்னர் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்விலிருந்து விலக்களிக்கக் கேட்டுக்கொண்டோம். மேலும், உச்ச நீதிமன்ற உத்தரவை எதிர்த்துச் சீராய்வு மனுத் தாக்கல் செய்யவும் கேட்டுக்கொண்டோம். அப்படியும் தீர்ப்பு வேறுவிதமாக வரும் பட்சத்தில், அனைத்து ஆசிரியர்களையும்கைவிடாமல் அனைவரும் பணியில் தொடரும் வகையில் சிறப்புத் தகுதித் தேர்வு நடத்த வேண்டும் என்றும், மற்ற மாநிலங்கள் இத்தகைய சூழலை எவ்வாறு கையாளுகின்றன என்பதை எல்லாம் எடுத்துரைத்தோம். சமூக நீதி அடிப்படையிலும் இடஒதுக்கீடு அடிப்படையிலும் தேர்ச்சி மதிப்பெண்ணை அறிவிக்கக் கேட்டுக்கொண்டோம்.

அதன் அடிப்படையில், வேலை தேடும் தேர்வர்களுக்காக நடத்தப்பட்ட ஆசிரியர் தகுதித் தேர்வில் சமூக நீதியைக் கடைப்பிடித்து, அதனடிப்படையில் தேர்ச்சி அறிவிக்கப்பட்டது. இத்தேர்வில் தற்போது பணியில் இருக்கும் ஆசிரியர்களும் எழுதினர். இதில், பணிபுரியும் பெரும்பாலான ஆசிரியர்கள் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்ச்சி அடைந்தனர்.

அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் முழுக்க முழுக்க ஏழ்மையில் தின கூலியாக பணியாற்றுவதால் மாணவர்கள் பள்ளிகளில. நடக்கும் காலாண்டு அரையாண்டு திருப்புதல் தேர்வு , பருவத் தேர்வுகள் கட்டணத்தை செலுத்த மாணவர்கள் இயலாது மிகவும் சிரமம் படுகிறார்கள் வினாத்தாள் மற்றும் விடைத்தாள் கட்டணத்தை முழுவதுமாக ரத்து செய்து மாணவர்களுக்கு உதவிட வேண்டும்

பல பள்ளிகளில் பல ஆண்டுகள் முன்னர் கட்டப்பட்ட கட்டடங்கள் இடியும் நிலையிலும் வளாகத்தில் வரைமுறையின்றி மாணவர்கள் கண்காணிக்க முடியாத நிலையில் உள்ள தேவையற்ற கட்டடங்களை இடித்து ஒரே சீரான பள்ளி வளாகத்தில் மாணவர்கள் எங்கு சென்றாலும் ஆசிரியர்கள் பார்வைவில் படுகின்ற அளவிற்கு வளாகம் இருப்பதை உறுதி செய்து உதவிட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்து தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ச.ஜோசப் விஜய் சமூக நீதி ஆட்சியில் நிறைவேற்றி கொடுக்க பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் ஆ.ராஜ்மோகன் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.





1

EXECUTIVE SUMMARY & THE VISIONARY MANDATE



The World Siddha Foundation (WSF) is initializing a historic, high-vibrational ecosystem across 150 acres of land. This project is a multi-dimensional synthesis of ancient Siddha wisdom, monumental architecture, world-class medical tourism, and automated public charity

WSF builds a self-sustaining spiritual infrastructure city. By creating a highly restrictive, ultra-exclusive wellness layer for the top 0.1% of global earners, we generate an indestructible, recurring operational surplus. This surplus completely funds, guarantees, and scales our massive public welfare initiatives—including an eternal 24/7/365 free food kitchen (Annadhana Koodam) and a free state-of-the-art holistic hospital.




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் 22வது புத்தகத் திருவிழா2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட நிர்வாகம், மில்கி மிஸ்ட் டெய்ரி புட் லிமிடெட் நடத்திய ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்கள் புத்தகம் வாசித்து சாதனை படைத்தமைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி எலைட் உலக சாதனையின் சார்பில் விருதினை நடுவர் அ.சங்கீதா நேற்று (31.07.2026) வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மக்கள் சிந்தனை பேரவைத்தலைவர் ஸ்டாலின் குணசேகரன், மில்கி மிஸ்ட் டெய்ரி புட் லிமிடெட் உதவி பொது மேலாளர் (மனிதவளம்) சத்தியராஜ் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தின் சார்பில் அரசு நிறுவனங்கள், தன்னாட்சி அமைப்புகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பணியாளர்களுக்கான (பற்றாளர்) இரண்டாம்காலாண்டுக்கூட்டம்மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமிதலைமையில்(30.07.2026)அன்றுநடைபெற்றது. உடன் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சுடலைமணி உட்பட பலர் உள்ளனர்.



## ஊத்துமலையில்

# கலைஞர் அறக்கட்டளை மூலம் உதவி வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு அறக்கட்டளை மூலம் காசோலை

ஊத்துமலை கழக முன்னோடி நெல்லையப்பன் அவர்கள் மருத்துவ உதவி தொகை வேண்டிதலைவர்கலைஞர் அறக்கட்டளை மூலம் உதவி வேண்டி விண்ணப்பித்திருந்தார்கள்அவருடையகோரிக்கையை நிறைவேற்றும் வகையில் கழகத் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் அவருடைய வறுமை மற்றும் மருத்துவ செலவை கணக்கிட்டு ரூபாய் 25000 தலைவர் கலைஞர் அறக்கட்டளை மூலம் அவருக்கு காசோலை வழங்கினார்கள்

ஆனால் நெல்லையப்பன் அவர்கள் மரணம் அடைந்து விட்டார் அவருடைய துணைவியாரும் மரணம் அடைந்து விட்டார் என்கிற விபத்தை விவரத்தை தலைமை கழகத்திற்கு தெரிவித்தோம் அதன் பின்னர் நெல்லையப்பன் அவர்களுடைய புதல்வர் முகேஷ் அவர்களுடைய பெயரில் அவருடைய குடும்பத்திற்கு காசோலை வழங்கப்பட்டது

இன்று தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்கள் தலைமை கழகத்தால் வழங்கப்பட்ட காசோலையை முகேஷ் அவரின் துணைவியார் வசம் வழங்கினார்கள்

நிகழ்வின்போது மாவட்ட கழக முன்னாள் செயலாளர்சிவபத்மநாதன் ஒன்றிய கழகச் செயலாளர் எம் பி எம் அன்பழகன் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் எம் முத்துக்குமார் மாவட்ட ஒட்டுனர் அணி அமைப்பாளர் பிஎஸ் அண்ணாமலை மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் சி முருகையா தொழிலதிபர் தங்கதுரை ஒன்றிய துணை சேர்மன் செல்வக்கொடி ராஜாமணி ஒன்றிய கவுன்சிலர் பழனி என்ற பால்துரை ஒன்றிய கவுன்சிலர் முருகேசன் கிளைக் கழகச் செயலாளர் ராமச்சந்திரன் கீழப்பவர் மேற்கொண்டு இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன் ஊத்துமலை இளைஞர் அணி ராஜா, குணா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# கல்குவாரி / கிரஷர் உரிமையாளர்களுக்கான ஈரோடி கலெக்டர் கந்தசாமி முக்கிய அறிவிப்பு



இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை சென்னை அவர்களின் 27.07.2026 நாளிட்ட செயல்முறைகள் ஆணைமற்றும்தமிழ்நாடு கனிமங்கள் சட்ட விரோத சுரங்கப்பணி, போக்குவரத்து மற்றும் கனிம சேமிப்பை தடுப்பதுமற்றும்கனிம வணிகர் விதிகள் 2011 –ல் சேர்க்கப்பட்டுள்ள விதி 3(A)–ன் அடிப்படையில், தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு சாதாரண கற்கள் (Rough Stone) மற்றும் Aggregates கொண்டு செல்வதற்கு 3 மாத காலத்திற்குதற்காலிகத் தடை விதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் தற்போது செயல்பட்டு வரும் அனைத்து கல்குவாரி உரிமையாளர்கள், Crusher Unit உரிமையாளர்கள், M–Sand உற்பத்தியாளர்கள், Mineral Dealers, லாரி ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்கள், தொடர்புடைய அனைவரும் இத்தடையை முழுமையாக கடைப்பிடிக்கவும், மேலும், இந்தத் Rough–stone including Khandas, boulders, size–reduced stones (broken or crushed) materials including M–Sand, metal jelly, ballasts, mill stones, hand chakais and building and road construction stones ஆகியவற்றினை தமிழ்நாட்டின் எல்லையை கடந்து பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்வதை தடைசெய்தும்,மேலும், புதுச்சேரி மற்றும் புதுச்சேரி யுனியன் பிரதேசத்தின்காரைக்கால் மாவட்டத்திற்கு மேற்கண்ட தடை பொருந்தாது என மேற்படி ஆணையின்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் உள்கட்டமைப்பு,வீட்டு வசதி மற்றும் தொழில் வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான கட்டுமானப் பொருட்களின் போதுமான இருப்பை மாநிலத்திற்குள் உறுதி செய்தல், கனிம வளங்களைப் பாதுகாத்தல், சட்டவிரோத சுரங்கம், சேமிப்பு மற்றும் கனிமப் போக்குவரத்தைத் தடுப்பது மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கல்குவாரி / கிரஷர் உரிமையாளர்கள், Mineral Dealers, பிற மாநிலங்களுக்கு Rough stone மற்றும் Aggregates கொண்டு செல்வதற்காக கனிமங்களை ஏற்றுதல், அனுப்புதல், விற்பனை செய்தல், போக்குவரத்து செய்தல் அல்லது அதற்கு உடந்தையாக இருத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. மேலும், மேற்கண்ட தற்காலிகத் தடையை மீறி Rough stone மற்றும் Aggregates –ஐ பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்லும் கல்குவாரி / கிரஷர் உரிமையாளர்கள், Mineral Dealers, வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் தொடர்புடைய நபர்கள் மீது நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் விதிகளின்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து இத்தற்காலிகத் தடையை முழுமையாகக் கடைப்பிடித்து, மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.



ஈரோடு மாவட்ட சட்ட அலுவலர்களுக்கான காலாண்டு ஆய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தலைமையில் (30.07.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தைச் சேர்ந்த சட்ட அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் 22வது புத்தகத் திருவிழா 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட நிர்வாகம், மில்கி மிஸ்ட் டெய்ரி புட் லிமிடெட் நடத்திய ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்கள் புத்தகம் வாசித்து சாதனை படைத்தமைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி, எலைட் உலக சாதனையின் சார்பில் விருதினை நடுவர் அ.சங்கீதா நேற்று (31.07.2026) வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி,ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மக்கள் சிந்தனை பேரவைத்தலைவர் ஸ்டாலின் குணசேகரன், மில்கி மிஸ்ட் டெய்ரி புட் லிமிடெட் உதவி பொது மேலாளர் (மனிதவளம்) சத்தியராஜ் உட்பட பலர் உள்ளனர்.




ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஓடாநிலை அருகில், செம்மாண்ட அப்பிச்சி கோவில், வாழை தோட்ட வலசு பகுதியில் தியாகி மு.குணாளன் நாடார் 221 வது ஆண்டு நினைவு நாள் விழாவினை ஒட்டி ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு. முத்துசாமி நேரில் சென்று அன்னாரது படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் திமுக மாநில கொள்கை பரப்புச் இணைச் செயலாளர் வி. சி. சந்திரகுமார், மாவட்ட துணைச் செயலாளர் ஆ. செந்தில்குமார்,மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிச்சாமி, மொடக்குறிச்சி ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன், விஜயகுமார், கதிர்வேல்,கொடுமுடி ஒன்றிய செயலாளர் நடராஜன் , பொதுகுழு உறுப்பினர் கதிரம்பட்டி மகாலிங்கம், மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# 'Donation thief, step down': Rahul joins Pappu Yadav's Ram Temple 'chanda' theft skit in Parliament premises Watch

*There was a touch of theatre in Parliament on Friday as Opposition MPs staged a skit over the alleged Ram Temple donation scam, with Rahul Gandhi making a cameo in Pappu Yadav's performance.*

*The protest, held near the Makar Dwar steps, came as Opposition parties continued to target the Centre over the alleged Ram Temple donation scam and demanded that Union Home Minister Amit Shah address the House over police action against students during recent protests.*

*Dressed in saffron robes and carrying a photograph of Lord Ram, Purnia MP Rajesh Ranjan, popularly known as Pappu Yadav, played the role of a temple priest collecting donations from devotees, news agency PTI reported.*

*According to a PTI video, several Opposition MPs, including Rahul Gandhi, took part in the skit by placing money into donation boxes kept at the protest site. As part of the symbolic performance, Yadav was seen slipping the money into his pocket instead of the donation box, portraying the Opposition's allegation that donations made at the Ram Temple were siphoned off. An MP from the Samajwadi Party, acting as a devotee, then confronted the "priest" over the alleged theft.*

*As the skit unfolded in the style of a street play, Opposition MPs punctuated the performance with slogans including "Chanda chor, gaddi chhod", "Jawab tumko dena hoga" and "Amit Shah, sadan mein aao!", news agency ANI reported.*

*As the performance reached its climax, the "priest" denied stealing any donations before making a theatrical escape from the crowd of "devotees", using satire to highlight the Opposition's allegations surrounding the Ram Temple donations.*




*The BJP strongly criticised the Opposition's protest, accusing it of insulting Hindu religious traditions and saints.*

*Union Minister Giriraj Singh condemned Pappu Yadav's appearance in saffron robes during the protest, alleging that the Opposition was "disrespecting sadhus to defame Sanatana."*

*BJP MP Sakshi Maharaj also attacked the demonstration, saying the Opposition had "no real connection with Lord Ram" and had insulted Lord Ram, the saffron colour and the Sanatan tradition through the skit.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.